<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 55/2022**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய R. சண்முகம் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 10.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | R. சண்முகம் | | |
| Father /Husband Name | : | ரெத்தினம் | Court | : |
| Village | : | திருச்சி | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 75/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

18.02.1995 தேதியிட்ட வாதியின் தகப்பனார் ரெத்தினம், என்பவர் உலகநாதன் மற்றும் சீனிவாசனிடமிருந்து கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.09.2020 தேதியிட்ட வாதியின் தந்தை பெயரில் உள்ள பட்டாவின் கணின் நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.07.2018 தேதியிட்ட வாதியின் தந்தை ரெத்தினம் என்பவரின் வாரிசு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.